CAREERINDIA

# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________

(Name) ____________________________

2. (Signature) ____________________________

(Name) ____________________________

**J 2 6 1 4**

OMR Sheet No. : ..............................................

(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No.________________________________

(In words)

Time : **1 $^1/_4$** hours]

[Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12**

Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** Ⓐ Ⓑ ● Ⓓ
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण** : Ⓐ Ⓑ ● Ⓓ
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**

www.careerindia.com

CAREERINDIA

# TAMIL
# தமிழ்
## Paper-II
## தாள்-II

**Note** : This paper contains **fifty (50)** multiple choice questions, each question carrying Two (2) marks. Attempt all the questions (50 × 2 = 100).

**குறிப்பு :** இந்த வினாத்தாள் ஐம்பது *(50)* விடை தெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் (2)இரண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (50 × 2 = 100).

1. மஂ்கான முனனா மயஙகும எழுதது
   (A) வ (B) ச (C) க (D) ய

2. ஐ-எழுத்துக்கு இசை நிறைவு-
   (A) இ (B) ஈ (C) உ (D) ஊ

3. திருக்குறளின் இறுதிக் குறட்பா இறும் வாய்பாடு-
   (A) காசு (B) பிறப்பு (C) நாள் (D) மலர்

4. புலவர் புராணம் பாடியவர்
   (A) தண்டபாணி சுவாமிகள் (B) ஆறுமுக நாவலர்
   (C) இராமலிங்க அடிகளார் (D) கதிரைவேல் பிள்ளை

5. அலிபாதுஷா நாடகம் எழுதியவர்
   (A) வண்ணக்களஞ்சியப் புலவர்(B) மீரா
   (C) அப்துல் ரகுமான் (D) உமறுப்புலவர்

6. கோகிலாம்பாள் கடிதங்கள் - நூலாசிரியர்
   (A) கு.அழகிரிசாமி (B) பி.எஸ். இராமையா
   (C) க.நா.சு. (D) மறைமலையடிகள்

7. தாயுமான சுவாமிகள் யாரிடம் கணக்கராய் இருந்தார் ?
   (A) அச்சுதப்ப நாயக்கர்
   (B) விஜயரகுநாத சொக்கலிங்க நாயக்கர்
   (C) கிருட்டினப்ப நாயக்கர்
   (D) விசுவநாத நாயக்கர்

8. திருநாவுக்கரசரால் சைவத்திற்கு மாறிய மன்னன்-
   (A) மகேந்திரவர்மன் (B) சிவக்கந்த வர்மன்
   (C) வீரவர்மன் (D) சிம்மவர்மன்

9. குழந்தைக் கவிஞர் என்றழைக்கபடுபவர்
   (A) வள்ளியப்பா (B) பூவண்ணன்
   (C) செல்வகணபதி (D) கதிரேசன்

**10.** வில்லுப்பாட்டு பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ள இலக்கியம்
(A) இராமாயணக் கும்மி (B) குற்றாலக் குறவஞ்சி
(C) முக்கூடற் பள்ளு (D) இராசராசசோழன் உலா

**11.** தொல்காப்பியம்
I முதன்முதலில் 1882-ல் பதிப்பிக்கப் பெற்றது
II முதன்முதலில் சி.வை.தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப் பெற்றது
III முதன்முதலில் இளம்பூரணரால் உரை கண்டது
IV இன்றைய மொழியியலாளர்களால் வியக்கப்படும் இலக்கணமாக விளங்குகிறது.
இவற்றுள்
(A) II, III, IV சரி (B) I, II, III சரி
(C) I, II, IV சரி (D) அனைத்தும் சரி

**12.** அகநானூறு -
I உருத்திரசன்மனரால் தொகுக்கப் பெற்றது
II யவனர்கள் பொன் தந்து மிளகு வாங்கிச் சென்றதைக் குறிப்பிடுகின்றது
III தமிழரின் திருமண நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது
IV மோரியர், நந்தர் பற்றியும் குறிப்பிடுகின்றது
இவற்றுள்
(A) I, II, III சரி (B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் தவறு (D) II, III, IV சரி

**13.** கடல் வாணிகத்தில் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பெற்ற பொருட்கள்
I மிளகு, தேக்கு, சந்தனம் II பருத்தி, தந்தம், மயில்
III அகில், நவமணி, முத்து IV குதிரை, பாவை விளக்கு, தாமிரம்
இவற்றுள்
(A) I, II, III சரி (B) அனைத்தும் சரி
(C) அனைத்தும் தவறு (D) I, III, IV சரி

**14.** சிலம்பும் மேகலையும்
I சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்டவை
II எண்பேராயம், ஐம்பெருங்குழு பற்றி முதன்முதலில் குறிப்பிடுகின்றன
III திட்டமிட்டு அமைக்கப் பெற்றிருந்த நெடுஞ்சாலைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன
IV சிலம்பில் காபாலிகரும் மேகலையில் பாசாண்டர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்
இவற்றுள்
(A) அனைத்தும் சரி (B) I, II, III சரி
(C) அனைத்தும் தவறு (D) I, III, IV சரி

15. ஜெயகாந்தன்
I ஞானபீட விருது பெற்றவர்
II சாகித்ய அகாதெமி விருது பெற்றவர்
III ஜே.ஜே. சில குறிப்புகள் எழுதியவர்
IV சுந்தர காண்டம் எழுதியவர்
இவற்றுள்
(A) I, II, IV சரி (B) I, III, IV சரி
(C) அனைத்தும் சரி (D) அனைத்தும் தவறு

16. சிவஞான முனிவர்
I அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் இயற்றினார்
II காஞ்சிப் புராணத்தின் முதல் பகுதியை இயற்றினார்
III சிவஞானபோதத்திற்கு உரை கண்டார்
IV தணிகைப் புராணம் இயற்றினார்
இவற்றுள்
(A) அனைத்தும் சரி (B) I, III, IV சரி
(C) I, II, IV சரி (D) I, II, III சரி

17. திருநாவுக்கரசர்
I தருமசேனர் என்றழைக்கப்பட்டார்
II தாணடக வேந்தர் என்றழைக்கப்பட்டார்
III ஆளுடைய அரசர் எனப்பட்டார்
IV திராவிட சிசு என்றழைக்கப்பட்டார்
இவற்றுள்
(A) II, III, IV சரி (B) I, II, III சரி
(C) அனைத்தும் சரி (D) அனைத்தும் தவறு

18. <u>உறுதிக்கூற்று</u>: (உ) கி.பி.முதல், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த ரோமாபுரி நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன
<u>காரணம்</u>: (கா) அக்காலத்தில் ரோமாபுரிக்கும் தமிழகத்துக்கும் இடையே வாணிகம் நடைபெற்றது.
(A) (உ). (கா). இரண்டும் சரி (B) (உ). சரி (கா). சரியன்று
(C) (உ). சரியன்று ; (கா). சரி (D) (உ). கா. இரண்டும் சரியல்ல

19. <u>உறுதிக்கூற்று</u>: (உ) கலந்தொடா மகளிர் எனப் பூப்புற்றிருக்கும் பெண்கள் குறிக்கப்படுவர்
<u>காரணம்</u>: (கா) பெண்கள் அக்காலத்தில் வீட்டுப் பாத்திரங்களைத் தொடமாட்டார்கள்
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று ; (கா). சரி

20. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சங்ககாலத்தில் கடல் வாணிகம் பண்டமாற்று முறையில் நடைபெற்றது
<u>காரணம்</u>: (கா) அக்காலத்தில் மக்கள் நாணயங்களைக் கொடுக்க விரும்பவில்லை
(A) (உ). சரி (கா). சரியன்று (B) (உ).சரியன்று; (கா). சரி
(C) (உ). (கா). இரண்டும் சரி (D) (உ). (கா).இரண்டும் சரியல்ல

21. உறுதிக்கூற்று: (உ) பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணம் ஒரு சார்பு நூல்
காரணம்: (கா) புலியூர் நம்பியின் நூலைத் தழுவி அது இயற்றப் பெற்றது.
(A) (உ). சரியன்று (கா). சரி (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). (கா). இரண்டும் சரியல்ல (D) (உ). சரி; (கா). சரியன்று

22. உறுதிக்கூற்று: (உ) தொண்டர் சீர் பரவுவார் என்று சேக்கிழார் அழைக்கப்படுகிறார்
காரணம்: (கா) இவரது பெருமையை உமாபதி சிவாச்சாரியார் சேக்கிழார் புராணத்தில் விதந்துரைக்கிறார்
(A) (உ). ; (கா). இரண்டும் சரியல்ல (B) (உ).; சரியன்று (கா). சரி
(C) (உ). (கா). இரண்டும் சரி (D) (உ). சரி (கா). சரியன்று

23. உறுதிக்கூற்று: (உ) விப்ரநாராயணருக்குத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது
காரணம்: (கா) திருமாலடியார்களுக்கு தொண்டு செய்தவராவார் அவர்
(A) (உ). (கா). இரண்டும் சரி (B) (உ).(கா).இரண்டும் சரியல்ல
(C) (உ).சரி ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று (கா). சரி

24. உறுதிக்கூற்று: (உ) மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
காரணம்: (கா) மக்கள் உயிராகக் கருதப்பட்டனர்
(A) (உ). (கா). இரண்டும் சரியல்ல (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). சரி. ; (கா). சரியன்று (D) (உ). சரியன்று ; (கா). சரி

25. உறுதிக்கூற்று: (உ) காவடிச்சிந்து பாடுவதில் அண்ணாமலைச் செட்டியார் வல்லவராகத் திகழ்ந்தார்
காரணம்: (கா) காவடியைத் தோளில் வைத்துக்கொண்டு அவர் ஆடிப்பாடினார்
(A) (உ). சரி ; (கா). சரியன்று (B) (உ). (கா). இரண்டும் சரி
(C) (உ). (கா). இரண்டும் சரியல்ல (D) (உ). சரியன்று (கா).சரி

26. உறுதிக்கூற்று: (உ) தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழா 2013இல் நடைபெற்று வருகின்றது
காரணம்: (கா) அவர் மறைந்து நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன
(A) (உ). சரியன்று ; (கா). சரி (B) (உ). சரி ; (கா). சரியன்று
(C) (உ). (கா). இரண்டும் சரி (D)(உ).(கா). இரண்டும் சரியல்ல

27. உறுதிக்கூற்று: (உ) தமிழ்த் தென்றல் என்று திரு.வி.க. அழைக்கப் பெறுகிறார்
காரணம்: (கா) தென்றல் போன்ற இதமான, மென்மையான தமிழ் நடைக்கு அவர் சொந்தக்காரர்
(A) (உ). (கா). இரண்டும் சரி (B)(உ). (கா). இரண்டும் சரியல்ல
(C) (உ). சரி (கா). சரியன்று (D) (உ). சரியன்று (கா). சரி

28. <u>நிரல்படுத்துக.</u>
ஓரறிவுயிர்:
(A) பிள்ளை, குழவி, போத்து, கன்று
(B) பிள்ளை, போத்து, கன்று, குழவி
(C) பிள்ளை, கன்று, குழவி, போத்து
(D) பிள்ளை, குழவி, கன்று, போத்து

29. <u>நிரல்படுத்துக.</u>
தொன்னெறி மரபில் கற்பிற்கு உரியர்:
(A) பாணன், கூத்தன், விறலி, பரத்தை
(B) .பாணன், விறலி, கூத்தன், பரத்தை
(C) பாணன், பரத்தை, கூத்தன், விறலி
(D) பாணன், கூத்தன், பரத்தை, விறலி

30. <u>நிரல்படுத்துக.</u>
வண்ணம் தோன்றும் வகை:
(A) தரவு, வாரம், எண், தாழிசை
(B) தரவு, எண், தாழிசை, வாரம்
(C) தரவு, தாழிசை, எண், வாரம்
(D) தரவு, வாரம், தாழிசை, எண்

31. <u>நிரல்படுத்துக.</u>
சாகித்திய அகாதெமி பரிசு பெற்ற படைப்புகள்(2009-2012)
(A) கையொப்பம், சூடிய பூ சூடற்க, காவல் கோட்டம், தோல்
(B) கையொப்பம், தோல், சூடிய பூ சூடற்க, காவல் கோட்டம்
(C) கையொப்பம், காவல் கோட்டம், தோல், சூடிய பூ சூடற்க
(D) கையொப்பம், காவல் கோட்டம், சூடிய பூ சூடற்க, தோல்

32. <u>நிரல்படுத்துக.</u>
நூல் கேட்கும் வகைகள்
(A) பொருள், இயைபு, பயன், அதிகாரி
(B) பொருள், பயன், அதிகாரி, இயைபு
(C) பொருள், அதிகாரி, பயன், இயைபு
(D) பொருள், அதிகாரி, இயைபு, பயன்

33. <u>நிரல்படுத்துக.</u>
மகடூஉக் குணம்:
(A) செறிவு, நிறைவு, செம்மை, செப்பு
(B) செறிவு, நிறைவு, செப்பு, செம்மை
(C) செறிவு, செம்மை, நிறைவு, செப்பு
(D) செறிவு, செப்பு , நிறைவு, செம்மை

34. <u>நிரல்படுத்துக.</u>
பூக்களின் வகைகள்
(A) கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ
(B) கொடிப்பூ, புதர்ப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ
(C) கொடிப்பூ, கோட்டுப்பூ, புதர்ப்பூ, நீர்ப்பூ
(D) கொடிப்பூ, புதர்ப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ

35. <u>நிரல்படுத்துக.</u>
யாழ்வகைகள்
(A) பேரியாழ், செங்கோட்டுயாழ், சகோடயாழ், மகரயாழ்
(B) பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ்
(C) பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ், மகரயாழ்
(D) பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டுயாழ்

36. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | அறிவினா | (1) | உயிர் எத்தன்மைத்து? |
| (b) | அறியான் வினா | (2) | குற்றியோ மகனோ தோற்றுகின்ற உரு? |
| (c) | ஏவல் வினா | (3) | உயிரெழுத்துக்கள் எத்தனை? |
| (d) | ஐய வினா | (4) | செல்லாயோ கடைக்கு? |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

37. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | காணத்தை நீலம் எனல் | (1) | எடுத்தமொழி இனஞ்செப்பல் |
| (b) | ஓலையைத் திருமுகம் எனல் | (2) | குழுவின் வந்த குறிநிலை வழக்கு |
| (c) | அறம் செய்தான் துறக்கம் புகும் எனல் | (3) | உயர்திணைச் சொல்லாயினும் அஃறிணைப் பாலாய் இசைக்கும் |
| (d) | கனலி கடுகிற்று எனல் | (4) | தகுதி வழக்கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

38. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | வெ.சாமிநாத சர்மா | (1) | போனதும் வந்ததும் |
| (b) | ஏ.கே.செட்டியார் | (2) | அமெரிக்காவைப் பார் |
| (c) | ஜெயகாந்தன் | (3) | எனது பர்மா வழிநடைப்பயணம் |
| (d) | சோமலை | (4) | உலகம் சுற்றிய தமிழன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

**39.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கருத்துரை | (1) | பொருள் தொகுத்துக் கூறல் |
| (b) | பதவுரை | (2) | செய்யுட் கருத்து உரைத்தல் |
| (c) | பொழிப்புரை | (3) | இலக்கண,இலக்கியம் எடுத்துக் காட்டிப் பொருள் விரிவு காணல் |
| (d) | அகலவுரை | (4) | சொல் தோறும் பதனைப் பயனுரைத்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**40.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | தேற்றேகாரம் | (1) | நீரே,நீயே வளியே |
| (b) | வினாவேகாரம் | (2) | உண்டோ மறுமை |
| (c) | பிரிநிலையேகாரம் | (3) | நீயே கொண்டாய் |
| (d) | எண்ணேகாரம் | (4) | அவருள் இவனே கள்வன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

**41.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | அரிமாநோக்கு | (1) | க.நா.சு. |
| (b) | சூறாவளி | (2) | வை.கோவிந்தன் |
| (c) | குமரிமலர் | (3) | ஏ.கே.செட்டியார் |
| (d) | சக்தி | (4) | ஈரோடு தமிழன்பன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**42.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மதங்க சூளாமணி | (1) | வயித்தியலிங்கம் |
| (b) | அபிதான சிந்தாமணி | (2) | விபுலானந்தர் |
| (c) | சிந்தாமணி நிகண்டு | (3) | தோலாமொழித்தேவர் |
| (d) | சூளாமணி | (4) | சிங்காரவேலு முதலியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

43. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கா.ஸ்ரீ.ஸ்ரீ. | (1) | பிரேம்சந்த் |
| (b) | சரஸ்வதி ராம்நாத் | (2) | காளிதாசர் |
| (c) | த.நா.குமாரசாமி | (3) | காண்டேகர் |
| (d) | சங்கரதாஸ் சுவாமிகள் | (4) | தாகூர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

44. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | தலைக்கோலி | (1) | பார்ப்பனச் சேரி |
| (b) | பட்டாரகி | (2) | தேவரடியார் |
| (c) | கலனை | (3) | துர்க்கை |
| (d) | அகரம் | (4) | தொழிலாளர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

45. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | காஞ்சி | (1) | சோழர் |
| (b) | தஞ்சை | (2) | சேரர் |
| (c) | மதுரை | (3) | பல்லவர் |
| (d) | வஞ்சி | (4) | பாண்டியர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 3 | 2 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 3 | 2 | 1 | 4 |

**(46–50)** கீழ்வரும் கவிதைப் பகுதியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடை அளிக்கவும்.

காடு களைந்தோம் - நல்ல
கழனிதிருத்தியும் உழவுபுரிந்தும்
நாடுகள் செய்தோம் - அங்கு
நாற்றிசை வீதிகள் தோற்றவும் செய்தோம்
வீடுகள் கண்டோம் - அங்கு
வேண்டியபண்டங்களை ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம் - புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்

*மலையைப் பிளந்தோம் - புவி*
*வாழவென்றேகடல் ஆழமும் தூர்த்தோம்*
*அலைகடல் மீதில்- பல்*
*லாயிரங் கப்பல்கள் போய்வரச் செய்தோம்*
*பல தொல்லையுற்றோம் - யாம்*
*பாதாளம் சென்று பசும்பொன் எடுத்தோம்*
*உலையில் இரும்பை - யாம்*
*உருக்கிப்பல் யந்திரம் பெருக்கியுந் தந்தோம்*

*ஆடைகள் நெய்தோம் - பெரும்*
*ஆற்றை வளைத்து நெல்நாற்றுக்கள் நட்டோம்*
*கூடைகலங்கள் - முதல்*
*கோபுரம் நற்சுதை வேலைகள் செய்தோம்*
*கோடையைக் காக்க - யாம்*
*குடையளித்தோம் நல்லநடையன்கள் செய்தோம்*
*தேடிய பண்டம் - இந்தச்*
*செகத்தில் நிறைந்தி முகத்தெதிர் வைத்தோம்*

*வாழ்வுக் கொவ்வாத - இந்த*
*வையத்தை இந்நிலை எய்தப்புரிந்தோம்*
*ஆழ்கடல், காடு - மலை*
*அத்தனையிற்பல சத்தை யெடுத்தோம்*
*ஈழை, அசுத்தம் - குப்பை*
*இலை என்னவே எங்கள் தலையிற் சுமந்தோம்*
*சூழக்கிடந்தோம் - புவித்*
*தொழிலாளராம் எங்கள் நிலைமையைக் கேளீர்!*

*கந்தையணிந்தோம்- இரு*
*கையை விரித்தெங்கள் மெய்யினைப் போர்த்தோம்*
*மொந்தையிற் கூழைப் - பலர்*
*மொய்த்துக் குடித்துப் பசித்துக் கிடந்தோம்*
*சந்தையில் மாடாய் - யாம்*
*சந்தம் தந்திட வீடுமில்லாமல்*
*சிந்தை மெலிந்தோம் - எங்கள்*
*சேவைக்கெலாம் இதுசெய் நன்றிதானோ?*

*மதத்தின் தலைவீர்! - இந்த*
*மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தைமாரே!*
*குதர்க்கம் விளைத்தே - பெருங்*
*கொள்ளையடித்திட்ட கோடீசுரர்காள்!*
*வதக்கிப் பிழிந்தே - சொத்தை*
*வடிகட்டி எம்மைத் துடிக்க விட்டீரே!*
*நிதியின் பெருக்கம் - விளை*
*நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணிவிட்டீர்!*

செப்புதல் கேட்பீர்! இந்தச்
செகத்தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்,
சுப்பல்களாக - இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்
இப்பெழுதே நீர் - பொது
இன்பம் விளைத்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே -எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறுமுன்பே ஒப்படைப்பீரே!

**46.** ஆழி மீது கலன்கள் போய்வரச் செய்தோர்

(A) மதத்தலைவர் (B) அண்ணாத்தைமார்

(C) தொழிலாளர் (D) கோடீசுரர்

**47.**

(I) பசும்பொன் எடுத்தோம்

(II) நாற்று நட்டோம்

(III) பசித்துக் கிடப்போம்

(IV) தொழும்பராய் மதித்திட வேண்டும்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) I, II, III சரி

(C) II, III, IV சரி (D) I, III, IV சரி

**48.** <u>உறுதிக்கூற்று</u>: (உ) இப்பொழுதே பொது இன்பம் விளையச் சொத்தைப் பொதுமைப்படுத்த வேண்டும்.

<u>காரணம்</u>: (கா) சொத்தை விளைத்த உழைப்பாளிகள் வறுமையில் உழல்கின்றனர்

(A) (உ). சரி (கா). சரியன்று (B) (உ). சரியன்று (கா). சரி

(C) (உ). (கா) இரண்டும் .சரியல்ல (D) (உ). (கா). இரண்டும் சரி

**49.** <u>நிரல்படுத்துக</u>.

(A) காடு களைதல், கழனி திருத்துதல், நாடு செயதல், உழவுபுரிதல்

(B) காடு களைதல், நாடு செய்தல், கழனி திருத்துதல், உழவுபுரிதல்

(C) காடு களைதல், உழவு புரிதல், நாடு செய்தல், கழனி திருத்துதல்

(D) காடு களைதல், கழனி திருத்துதல், உழவு புரிதல், நாடு செய்தல்

**50.** <u>பொருத்துக</u>:

(a) கோபுரம் (1) இரும்பு

(b) மொந்தை (2) தொழும்பர்

(c) சுப்பல் (3) கூழ்

(d) உலை (4) சுதை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

**Space For Rough Work**

www.careerindia.com